# ஏப்ரல் - 17- செவ்வாய்

## என் கற்பாறையும் கோட்டையும் நீரே. திபா. 31:3

### முதல் வாசகம் : திருத்தூதர் பணி 7 : 51 -– 8 : 1

அந்நாளில் ஸ்தேவான் மக்களையும், மூப்பர்களையும், மறைநூல் அறிஞரையும் நோக்கிக் கூறியது: திமிர் பிடித்தவர்களே, இறைவார்த்தையைக் கேட்க மறுக்கும் செவியும் ஏற்க மறுக்கும் உள்ளமும் கொண்டவர்களே, உங்களுடைய மூதாதையரைப் போல நீங்களும் தூய ஆவியாரை எப்போதும் எதிர்க்கிறீர்கள்.எந்த இறைவாக்கினரைத்தான் உங்கள் மூதாதையர் துன்புறுத்தாமலிருந்தார்கள்? நேர்மையாளருடைய வருகையை முன்னறிவித்தோரையும் அவர்கள் கொலை செய்தார்கள். இப்போது நீங்கள் இயேசுவைக் காட்டிக்கொடுத்துக் கொன்றுவிட்டீர்கள். கடவுளின் தூதர்கள் வழியாய்த் தரப்பட்ட திருச் சட்டத்தை நீங்கள் பெற்றிருந்தும் அதனைக் கடைப்பிடிக்கவில்லை."இவற்றைக் கேட்டவர்கள் உள்ளம் கொதித்தெழுந்து அவரைப் பார்த்துப் பற்களை நறநறவெனக் கடித்தார்கள்.அவரோ தூய ஆவியின் வல்லமையை நிறைவாய்ப் பெற்று, வானத்தை உற்று நோக்கினார். அப்போது கடவுளின் மாட்சியையும் அவர் வலப்பக்கத்தில் இயேசு நிற்பதையும் கண்டு,"இதோ, வானம் திறந்திருப்பதையும், மானிட மகன் கடவுளது வலப்பக்கத்தில் நிற்பதையும் காண்கிறேன்" என்று கூறினார்.ஆனால் அவர்கள் தங்கள் செவிகளை அடைத்துக் கொண்டு பெருங் கூச்சலிட்டு ஒருமிக்க அவர்மேல் பாய்ந்தார்கள்.நகரத்திற்கு வெளியே இழுத்துக் கொண்டு போய் அவர்மேல் கல்லெறிந்தார்கள். சாட்சிகள் தங்கள் மேலுடைகளைச் சவுல் எனும் இளைஞரிடம் ஒப்படைத்தார்கள்.அவர்கள் ஸ்தேவான்மீது கல்லெறிந்தபோது அவர், "ஆண்டவராகிய இயேசுவே, எனது ஆவியை ஏற்றுக்கொள்ளும்" என்று வேண்டிக்கொண்டார்.பின்பு முழந்தாளபடியிட்டு உரத்த குரலில், "ஆண்டவரே, இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்" என்று சொல்லி உயிர்விட்டார்.ஸ்தேவானைக் கொலை செயவதற்குச் சவுலும் உடன்பட்டிருந்தார். அந்த நாள்களில் எருசலேம் திருச்சபை பெரும் இன்னலுக்கு உள்ளாகியது. திருத்தூதர்களைத் தவிர மற்ற அனைவரும் யூதேயா, சமாரியாவின் நாட்டுப் புறமெங்கும் சிதறடிக்கப்பட்டுப் போயினர்.

**பதில்பாடல் :** உமது கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்.

### நற்செய்தி : யோவான் 6 : 30 – 35

அக்காலத்தில் மக்கள் இயேசுவிடம்: "நாங்கள் கண்டு உம்மை நம்பும் வகையில் நீர் என்ன அரும் அடையாளம் காட்டுகிறீர்? அதற்காக என்ன அரும் செயல் செய்கிறீர்?எங்கள் முன்னோர் பாலை நிலத்தில் மன்னாவை உண்டனரே! "அவர்கள் உண்பதற்கு வானிலிருந்து உணவு அருளினார்" என்று மறைநூலிலும் எழுதப்பட்டுள்ளது அல்லவா!" என்றனர்.இயேசு அவர்களிடம், "உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் வானிலிருந்து உங்களுக்கு உணவு அருளியவர் மோசே அல்ல் வானிலிருந்து உங்களுக்கு உண்மையான உணவு அருள்பவர் என் தந்தையே.கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து உலகுக்கு வாழ்வு அளிக்கிறது" என்றார்.அவர்கள், "ஐயா, இவ்வுணவை எங்களுக்கு எப்போதும் தாரும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.இயேசு அவர்களிடம், "வாழ்வு தரும் உணவு நானே. என்னிடம் வருபவருக்குப் பசியே இராது என்னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவருக்கு என்றுமே தாகம் இராது" என்றார்.

**தியானம்:** "வாழ்வுதரும் உணவுநானே"என்ற இயேசுவின் வார்த்தைளின் பொருளை நாம் கண்டுபிடிப்போம். உயிரோடிருத்தல் என்பது வேறு உயிர் வாழ்வது என்பது வேறு, சாதாரண உணவு என்பது உயிரோடிருப்பதற்கு உதவி செய்கின்றது, இயேசுதரும் உணவு உயிர் வாழ்வதற்கு உதவியாக இருக்கின்றது. இங்கு வாழ்வு எனக்குறிப்பிடபடுவது நாம் உயிரோடிருத்தல் அல்ல,மாறாகஉயிர் வாழ்வதைக் குறிக்கின்றது, அது ஆன்மீகம் சார்ந்த வாழ்வு, உயிரோடு வாழ்வது என்பது கடவுளோடு இணைந்த வாழ்வு. அந்த வாழ்வு நமக்கு இயேசுவால் நமக்கு எளிதாக்கப்பட்டிருக்கின்றது. இயேசு இல்லாமல் நாம் அந்த வாழ்வை பெறமுடியாது. இத்தகைய வாழ்வுக்கு இயேசுதான் அடிப்படை என்றால். இயேசுதான் அந்த வாழ்வு தரும் உணவு. மனிதனின் வாழ்வில் அவன் அமைதியை தேடி அலைந்து கொண்டிருக்கின்றான், அந்த அமைதியை வழங்ககூடியவர் இயேசு என்பதை மறந்து வாழ்கின்றான். அந்த நிலையான அமைதியை நாம் பெறவேண்டும் என்றால் இயேசுவை நாம் பின்பற்ற வேண்டும், யூதர்கள் உணவு என்பதை வெறும் மண்ணக உணவாகப் பார்த்தார்கள் அதனால் தான் இயேசுசொன்ன சிந்தனையை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்களுடைய உள்ளமெல்லாம் இந்த மண்ணகத்தில் நிலைத்திருந்தது. அவர்கள் பின்பற்றிய சடங்குகள் மூடியிருக்கும் அவர்களின் கண்களைத் திறக்க உதவவில்லை. அவர்களுக்கு உண்மையான அமைதியைப் பெறவேண்டும் என்ற எண்ணமும் இல்லை, அதனால் அவர்கள் இயேசுவைப் புறக்கணித்தார்கள். நமது வாழ்விலும் அமைதியை தரவ வல்லவர் இயேசு ஒருவரே என்பதை உணர்ந்து வாழ்வோம் ஆமென்.